ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351





வெள்ளி ❖ ஆகஸ்ட். 04, 2023 புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 301 ❖ ரூ.10

### டெல்லி அரசு அதிகாரிகள் நியமன மசோதா குரல் வாக்கெடுப்பு மக்களவையில்

# நிறைவேற்றம்

## அரசு மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டுவந்துள்ள நிலையில் ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரான் செயல்; காங்கிரஸ் எம்.பி. சசி தரூர்

புதுடெல்லி, ஆக. 4-

டெல்லி அரசு அதிகாரிகள் நியமன மசோதா மக்களவையில் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது. இதில், பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்பி.,க்கள் பங்கேற்று விவாதித்தனர். உள்துறை அமைச்சர் அமித் ஷா பதிலளித்தார். அப்போது டெல்லி ஆம் ஆத்மி அரசை அவர் சரமாரியாக விமர்சித்தார்.



மணிப்பூர் வன்முறை தொடர்பாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்றும் அமளி நீடித்தது. மணிப்பூர் வன்முறை தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி அவைக்கு வந்து தனது கருத்தை தெரிவிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் நேற்றும் தொடர்ந்து வலியுறுத்தின. பிரதமருக்குப் பதில், உள்துறை அமைச்சர் அமித் ஷா அறிக்கை அளித்து பேசுவதற்கான திட்டம் ஆளும் கட்சிக்கு இருந்ததாகக் கூறப்பட்டது.

எனவே, இது தொடர்பாக காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கேவை, மத்திய அமைச்சர்கள் பிரஹலாத் ஜோஷி, பியூஷ் கோயல் ஆகியோர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். எனினும், அதில் உடன்பாடு எட்டப்படாததால், உணவு இடைவேளைக்குப் பிறகும் எதிர்க்கட்சிகள் மாநிலங்களவையில் இருந்து வெளிநடப்பு செய்தன. எனினும், மசோதாக்கள் மாநிலங்களவையில் தொடர்ந்து விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டன. பத்திரிகை மற்றும் பருவ இதழ்கள் மசோதா 2023, வழக்கறிஞர்கள் திருத்த மசோதா 2023 ஆகிய மசோதாக்கள் உணவு இடைவேளைக்குப் பிறகு நிறைவேற்றப்பட்டன.

மக்களவையிலும் அமளி நிலவியது. தொடக்கத்தில், அவைக்கு சபாநாயகர் ஓம் பிர்லா வரவில்லை. அவருக்குப் பதிலாக பாஜகவைச் சேர்ந்த ராஜேந்திர அகர்வால் அவையை நடத்தினார். அதிருப்தி காரணமாக ஓம் பிர்லா வராத நிலையில், அவர் அவைக்கு வர வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி வலியுறுத்தினார். இதையடுத்து, மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு ஓம் பிர்லா அவைக்கு வந்தார். எனினும், வெறும் 10 நிமிடங்கள் மட்டுமே அவர் அவையில் இருந்தார். மணிப்பூர் விவகாரம் காரணமாக அவை ஒத்திவைக்கப்பட்டது.

உணவு இடைவேளைக்குப் பிறகு கூடிய மக்களவையில், டெல்லி அரசு திருத்த மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விவாதத்தில் பேசிய காங்கிரஸ் எம்.பி. சசி தரூர், இந்த அரசு மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ள நிலையில் டெல்லி அரசு மசோதாவை நிறைவேற்ற நினைப்பது ஜனநாயக நெறிமுறைகளுக்கு எதிரானது. கூட்டணி காரணமாக இந்த மசோதாவை தங்கள் கட்சி ஆதரிக்கவில்லை என்றும் ஜனநாயக கூட்டாட்சித் தத்துவத்தைக் கருத்தில் கொண்டே ஆதரிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்த மசோதா தொடர்பாக பேசிய தேசியவாத காங்கிரஸ் எம்பி சுப்ரியா சுலே, சட்டப்பிரிவு 239AA-படி டெல்லி அரசிடம் இருந்து அதிகாரங்களைத் திரும்பப் பெற நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என குறிப்பிட்டார்.

பாஜக தெற்கு டெல்லி எம்பி ரமேஷ் பிதூரி, திமுக எம்பி தயாநிதி மாறன், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் எம்பி மிதுன் ரெட்டி, ஐக்கிய ஜனதா தளம் எம்பி ராஜிவ் ரஞ்சன் சிங், பாஜக எம்பி பினாக்கி மிஷ்ரா உள்ளிட்டோர் டெல்லி அரசு மசோதா தொடர்பான விவாதத்தில் பங்கேற்றுப் பேசினர்.

தொடர்ந்து பேசிய உள்துறை அமைச்சர் அமித் ஷா, டெல்லி அரசை சரமாரியாக விமர்சித்தார். ஊழலில் திளைத்த டெல்லி அரசு தனது ஊழல்களை மறைக்கவே அதிகாரிகள் நியமன மசோதாவை எதிர்க்கிறது என்றார். அமித் ஷாவின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளுக்குப் பின்னர் குரல் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. குரல் வாக்கெடுப்பு மூலம் டெல்லி அதிகாரிகள் நியமன மசோதா பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டது.

டெல்லி யூனியன் பிரதேசம் தொடர்பாக சட்டம் இயற்றுவதற்கான அதிகாரம் மத்திய அரசுக்கு உள்ளது. டெல்லி தொடர்பாக மத்திய அரசு சட்டம் இயற்ற முடியும் என்று உச்ச நீதிமன்றமும் தெரிவித்திருக்கிறது. இந்த பின்னணியிலேயே மசோதா நிறைவேற்றப்பட்டது என்பதே மத்திய அரசின் வாதமாக இருக்கிறது.



திருவரங்குளம் தெப்பக்குளம் ஆன திருக்குளம் ஆனதீர்த்தக் குளக்கரையில் ஆடிப்பெருக்கு முன்னிட்டு வட்டாரப் பகுதியில் உள்ள புதுமண தம்பதிகள் உறவினர்கள் நண்பர்கள் வாழ்த்து சொல்ல தாழி பெருக்கி கொண்டு கோவிலில் தரிசனம் செய்தனர். பெண்கள் ஒருவருக்கு ஒருவர் மஞ்சள் கயிறை கட்டிக்கொண்டு அன்பு பரிமாறினர் தீர்த்த குளமான நைனாரீ குளத்தில் உள்ளூர் பெண்கள் பூ பழங்களை தண்ணீர் தாய்க்கு படைத்து தரிசனம் செய்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நேற்று சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் பண்டலத்திற்குட்பட்ட எம்.ஜி.ஆர். சாலையில் 71 கோடியே 31 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அமைச்சர்கள் க. பொன்முடி, தா.மோ. அன்பரசன், சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ் குமார், சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர் ஜெ. ராதாகிருஷ்ணன், இணை ஆணையர் (பணிகள்) ஜி.எஸ். சமீரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுக்கோட்டை திருக்கோகர்ணம் அருள்மிகு பிரகதாம்பாள் திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் ஆடி 18 ஆம் தேதியான நேற்று தொடங்கப்பட்டன. புதுக்கோட்டை சமஸ்தானத்தின் மகாராணியார் சாருபாலா தொண்டைமான் தலைமையில் திருப்பணிக் குழுவினர் கலந்துக்கொண்டனர். உபயதாரர்களின் உதவியுடன் ரூபாய் 6 கோடி செலவில் திருப்பணிகளை முடித்து ஒரு ஆண்டு காலத்திற்குள் கும்பாபிஷேகம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

### விராலிமலை அரசு மருத்துவமனை குடிநீர் தொட்டியில்

## அழுகிய நிலையில் குரங்கு சடங்கலங்கள் குடிநீரை குடித்த பொதுமக்கள் பேரதிர்ச்சி

விராலிமலை , ஆக. 4-

புதுக்கோட்டை மாவட்டம் விராலிமலை அரசு மருத்துவமனைக்கு நாள்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் வந்து செல்கின்றனர். 20 க்கும் மேற்பட்ட நோயாளிகள் உள் நோயாளிகளாக சிகிச்சை பெற்று வருகின்றனர்.



இங்குவரும் மக்களின் குடிநீர் தேவைக்காக அந்த மருத்துவமனை கட்டிடத்தின் மேற்புறம் இரண்டு சின்டெக்ஸ் டேங்குகள் வைத்து விட்டு அதிலிருந்து தண்ணீர் எடுத்து அதனை ஆர்ஓ இயந்திரம் மூலம் சுத்திகரித்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்த மருத்துவமனை உட்பகுதியில் இருந்த ஒரு குடிநீர் குழாயில் வந்த தண்ணீரில் நேற்று முதல் துர்நாற்றம் வீசியதால் சந்தேகம் அடைந்த பொதுமக்கள் இது குறித்து மருத்துவமனை பணியாளர்கள் மற்றும் ஊராட்சி நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளனர். அதன் அடிப்படையில் மருத்துவப் பணியாளர்கள் மற்றும் ஊராட்சிநிர்வாகத்தினர் சம்பந்தப்பட்ட மருத்துவமனையில் மேற்புறம் உள்ள சின்டெக்ஸ்டேங்குகளை சோதனை செய்து பார்த்தபோது அதில் ஒரு சின்டெக்ஸ் டேங்கில் இரண்டு குரங்குகள் செத்து அழுகிய நிலையில் கிடந்ததைக் கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதனையடுத்து மருத்துவமனை பணியாளர்கள் உள்ளிட்டோர் சின்டெக்ஸ் டேங்கில் செத்துக்கிடந்த குரங்குகளின் சடலத்தை அதிலிருந்து அப்புறப்படுத்தியுள்ளனர்.



சம்பந்தப்பட்ட குடிநீர் தொட்டியில் இருந்து விநியோகம் செய்யப்பட்ட குடிநீரை தான் கடந்த இரண்டு நாட்களாக பொதுமக்கள் குடித்து வந்ததாகவும் மருத்துவமனை நிர்வாகம் முறையாக குடிநீர் பராமரிக்காததன் விளைவாக இந்த அவலம் நடந்துள்ளதாகவும் இது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் எனவும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடத்திலும் நோயாளிகளிடத்திலும் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்மை நாம்
கேள்வி கேட்காதவரை..
நம் தவறுகளை
நாம் உணரபோவதில்லை...




# கரூரில் அமைச்சர் செந்தில் பாலாஜி உதவியாளர் வீடு உள்ளிட்ட 5 இடங்களில் அமலாக்கத் துறை சோதனை



கரூர் , ஆக. 4–

கரூர் - கோவை சாலையில் உள்ள அமைச்சர் செந்தில் பாலாஜி உதவியாளர் சங்கர் வீடு, செங்குந்தபுரம் பகுதியில் உள்ள ஒரு நிதி நிறுவனம் மற்றும் சின்ன ஆண்டான் கோவில் பகுதியில் உள்ள கிரானைட் தொழிற்சாலை உள்ளிட்ட 5 இடங்களில் அமலாக்கத்துறை அதிகாரிகள் நேற்று காலை முதல் சோதனை மேற்கொண்டு வருகின்றனர். மத்திய பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னதாக நேற்று முன்தினம் திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் பகுதியில் திமுக ஒன்றிய செயலாளர் வீடு மற்றும் அலுவலகம் பண்ணை வீடுகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை மேற்கொண்டதை தொடர்ந்து கரூரில் இந்த சோதனை நடத்தப்படுவதாக கூறப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் திமுக (தெற்கு) ஒன்றியச் செயலாளராக இருப்பவர் வீரா.சாமிநாதன். கல்வி நிறுவனம் நடத்தி வருகிறார். இவரது வீடு வேடசந்தூர் கொங்கு நகரில் உள்ளது. நேற்று மாலை வேடசந்தூர் வந்த அமலாக்கத் துறை அதிகாரிகள் 5 பேர், சாமிநாதனின் வீட்டில் சோதனை செய்தனர். வேடசந்தூர் அருகே தமுத்துப்பட்டி கிராமம் அருகே உள்ள தோட்டத்து வீட்டில் 2 அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது, சாமிநாதன் சென்னையில் இருந்தார். வீட்டில் அவரது தாய் மட்டுமே இருந்தார். நேற்று மாலை தொடங்கி இரவு வரை சோதனை நீடித்தது.

மதுபானக் கூடங்கள் நடத்துவதற்கான அனுமதி வழங்க பணம் வசூலித்து தந்ததாக சாமிநாதன் மீது புகார் எழுந்த நிலையில், இந்த சோதனை நடந்ததாகத் தெரிகிறது.

இந்நிலையில் கரூரில் நேற்று அமைச்சர் செந்தில் பாலாஜியின் உதவியாளர் சங்கர் வீடு உள்ளிட்ட ஐந்து இடங்களில் சோதனை நடைபெற்றது. குறிப்பிடதக்கது.

# பிலிப்பைன்ஸ் விமான விபத்து இந்திய மாணவர், பயிற்சியாளர் உயிரிழப்பு



மனிலா , ஆக. 4–

பிலிப்பைன்ஸ் நாட்டில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் இந்திய மாணவர் ஒருவரும் அவரது பயிற்சியாளரும் உயிரிழந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டின் இலோகோஸ் வடக்கு மாகாணத்தில் உள்ள லாவோக் நகரின் சர்வதேச விமான நிலையத்திலிருந்து செஸ்னா 152 எனப்படும் ஒரு சிறிய ரக பயிற்சி விமானத்தில் இந்தியாவைச் சேர்ந்த விமானப் பயிற்சி மாணவரான அன்ஷும் ராஜ்குமார் மற்றும் அவருடைய பயிற்சியாளரும் பயணித்துள்ளனர். துகுகேராவ் விமான நிலையம் நோக்கி சென்று கொண்டிருந்த அந்த விமானம், ககாயன் மாகாணத்தின் அல்காலா நகரிலிருந்து 64 கிமீ தூரத்தில் சிக்னலை இழந்ததாக பிலிப்பைன்ஸ் உள்நாட்டு விமான போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து மீட்புப் பணிகளை பிலிப்பைன்ஸ் அரசு தீவிரப்படுத்தியது. ஹெலிகாப்டர்களின் நடந்த தேடுதல் பணியில், விமானத்தின் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. விமானத்தில் பயணம் செய்த அன்ஷும் ராஜ்குமார் மற்றும் அவருடைய பயிற்சியாளரின் உடல்களை மீட்கும் பணிகள் தற்போது நடந்து வருகின்றன.

கடந்த பிப்ரவரி மாதம், இதே செஸ்னா ரக விமானம் ஒன்று பிலிப்பைன்ஸின் மாயோன் எரிமலைப் பகுதியில் விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த நான்கு பேரும் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# பெற்றவர்கள் வாங்கிய கடனை திருப்பி கொடுக்க நகை திருடிய இளம்பெண் கைது

காஞ்சிபுரம், ஆக. 4–

காஞ்சிபுரம், வள்ளல் பச்சையப்பன் தெரு பகுதியில் நகைக்கடை உள்ளது. இந்த கடைக்கு கடந்த சிலநாட்களுக்கு முன்பு வந்த டிப்-டாப் உடை அணிந்த இளம்பெண் நகை வாங்குவது போல் நடித்து ஊழியர்களின் கவனத்தை திசை திருப்பி இரண்டு தங்க செயின்களை திருடி தப்பி சென்று விட்டார்.

இது குறித்து நகைக்கடை உரிமையாளர் விஷ்ணு காஞ்சி போலீசில் புகார் செய்தார். போலீசார் வழக்குப்பதிவு செய்து நகைக்கடையில் பதிவாகி இருந்த கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். அதில் இளம்பெண் நகை வாங்குவது போல் நடித்து நகையை சுருட்டி செல்வது பதிவாகி இருந்தது.

விசாரணையில் அவர், வாலாஜாபாத் அருகே உள்ள புளியம்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த காயத்திரி (26) என்பது தெரிந்தது. அவரை காஞ்சி போலீசார் கைது செய்தது விசாரித்தனர். அப்போது கடனை அடைக்க நகைதிருட்டில் ஈடுபட்டதாக அவர் கூறி உள்ளார். கைதான காயத்ரி போலீசாரிடம் அளித்துள்ள வாக்குமூலத்தில், எனது குடும்பத்தினருக்கு கடன் கொடுத்தவர்கள் கடனை கேட்டு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்தனர்.

இதனால் வாங்கிய கடனை எப்படியாவது திருப்பி செலுத்தி விட வேண்டும் என நினைத்து, நகைக்கடையில் தங்க செயின்களை திருடினேன். ஆனால் கண்காணிப்பு காமிராவில் பதிவானதால் சிக்கிக்கொண்டேன் என்று கூறி உள்ளார். காயத்ரியிடம் இருந்து நகை பறிமுதல் செய்யப்பட்டது. அவரை போலீசார் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# உதவியாளர் காலணி எடுத்துக் கொடுத்த விவகாரம் விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் விளக்கம்



விழுப்புரம் , ஆக. 4–

விழுப்புரத்தில் வருவாய் கோட்டாட்சியர் தனது உதவியாளரை காலணியை எடுத்துவரச் செய்தததாக செய்திகள் வெளியான நிலையில் அதுதொடர்பாக கோட்டாட்சியர் பிரவீணா குமாரி விளக்கம் அளித்துள்ளார்.

விழுப்புரம் அருகே ஸ்டாலின் நகரில் அரசு புறம்போக்கு இடத்தில் வீடுகட்டி வாழ்ந்து வந்தவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்குவதற்காக ஆய்வு சென்ற விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் பிரவீணா குமாரி தன் உதவியாளரிடம் தன் காலணியை கொண்டுவருமாறு உத்தரவிட்டதாகவும், இதையடுத்து அவரின் உதவியாளர் கோட்டாட்சியரின் காலணியை கொண்டுவந்து ஜீப் பின்புறம் வைத்ததாகவும் செய்திகள் வெளியானது.

இந்நிலையில் கோட்டாட்சியர் பிரவீணா குமாரி விளக்கமளித்துள்ளார்.

இது தொடர்பாக பிரவீணாகுமார், "ஆய்வுக்காக நான் எம்எல்ஏ புகழேந்திக்காக ஸ்டாலின் நகரில் காத்திருந்தபோது, காலணியை கழட்டிவிட்டுவிட்டு அமர்ந்திருந்தேன். எம்எல்ஏ வந்தவுடன் அவரை வரவேற்க காலணியை அணியக்கூட தோன்றாமல் சென்றுவிட்டேன். இதனை அறிந்த உதவியாளர் தன்னிச்சையாக அவரே காலணியை கொண்டுவந்து, நாங்கள் ஆய்வுக்கு செல்லும் திசையில் வைத்தார். அப்போதே நான் என் உதவியாளரை அழைத்து கடுமையாக கண்டித்தேன் இதனை அங்கிருந்தவர்கள் தவறாக புரிந்துகொண்டு விட்டனர்" என்று கூறியுள்ளார்.

### சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில்

# 2 மாதத்தில் பக்தர்கள் ரூ.56,76,634 காணிக்கையாக செலுத்தியுள்ளனர்



ஊத்துக்கோட்டை, ஆக4–

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் 2 மாதங்களுக்குப்பின்னர் உண்டியல்கள் நேற்று திறக்கப்பட்டு பக்தர்கள் செலுத்திய காணிக்கை தொகை எண்ணப்பட்டது.

இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையர் கே.சித்ராதேவி, கோயில் நிர்வாக அதிகாரிகள் சிறுவாபுரி சோ.செந்தில்குமார், திருநின்றவூர் சரவணன், ஆய்வாளர் கலைவாணன் மற்றும் பக்தர்கள் முன்னிலையில் உண்டியல்கள் திறந்து எண்ணப்பட்டன. இதில்,ரூ.56 லட்சத்து 76 ஆயிரத்து 634 ரொக்கம்,105 கிராம் தங்கம்,5 கிலோ வெள்ளி ஆகியவற்றை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தி இருந்தனர்.

# ஆக.7ல் நெசவாளர்கள் வீடுகளில் கருப்புக்கொடி ஏற்ற முடிவு!



காஞ்சிபுரம், ஆக,4

தேசிய கைத்தறி தினம் ஆகஸ்ட் 7ஆம் தேதி கொண்டாடப்படும் நாளில் தமிழகம் முழுவதும் நெசவாளர்கள் வீடுகளில் கருப்புக்கொடி ஏற்ற முடிவு செய்து நெசவுத்தொழிலாளர்கள் சங்கத்தில் நேற்று (வியாழக்கிழமை) தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் காந்தி சாலையில் தேரடி அருகில் பட்டு மற்றும் பருத்தி கைத்தறி நெசவுத் தொழிலாளர் சங்க அலுவலகம் உள்ளது. இச்சங்க கூட்டம் மாவட்ட தலைவர் ஜி.எஸ்.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. சங்க மாவட்ட பொருளாளர் எஸ்.பழனி முன்னிலை வகித்தார்.

சங்க மாவட்டச் செயலாளர் வி.சிவப்பிரகாசம் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர் கூறியது..கைத்தறி ரகங்களை விசைத்தறியில் உற்பத்தி செய்வதை தடை செய்யக் கோரி கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறோம். ஆனால் அரசு அதை தடுப்பதற்கான முயற்சிகளை முறையாக மேற்கொள்ளவில்லை.

இதன் அடுத்த கட்ட முயற்சியாக வரும் 7 தேசிய கைத்தறி தினத்தன்று தமிழகத்தில் உள்ள அனைத்து கைத்தறி நெசவாளர்கள் வீடுகளிலும் கருப்புக் கொடி ஏற்றுவது என ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதே நாளில் காலையில் காஞ்சிபுரத்தில் சங்க அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தவும் திட்டமிட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

### சீர்காழி காவல் நிலையத்தில் இருந்து

# கொலை வழக்கில் கைது செய்யப்பட்ட குற்றவாளி தப்பி ஓட்டம், எஸ்.பி.நேரில் விசாரணை



சீர்காழி.ஆக,4

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே கடந்த மாதம் 30-ம் தேதி தேர் மேலவீதியில் கைகள் கட்டப்பட்டு அடித்து கொலை செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்த கிடந்த மயிலாடுதுறை சேர்ந்த கொத்தனார் முருகன் (50) என்பவர் உடலை சீர்காழி போலீசார் கைப்பற்றி வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

அந்த கொலை வழக்கில் கோபால் (24) என்பவரை கிராமமக்கள் பிடித்து காவல் நிலையத்தில் போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

காவல் நிலையத்தில் வைத்து விசாரணை மேற்கொண்ட நிலையில் காவல் நிலையத்தில் இருந்து தப்பி ஓடிவிட்டார் கைதி. தப்பியோடிய கைதி கோபாலை போலீசார் தேடி வருகின்றனர்.

தகவல் அறிந்து மயிலாடுதுறை மாவட்ட காவல் கணண்காணிப்பாளர் நிஷா, காவல்நிலையத்தில் போலீசாரிடம் விசாரணை மேற்கொண்டுள்ளார். விசாரணை கைதி தப்பி ஓடிய சம்பவம் சீர்காழியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



▶ காரைக்கால் நகராட்சி நிர்வாகம் மூலம் பறவை பேட்டையில் இயங்கி வரும் குப்பை கிடங்கை ஆட்சியர் குலோத்துங்கன் நேற்று மாலை பார்வையிட்டார். குப்பையை பிரித்து எடுக்கும் (பயோ மைனிங்) பணியை ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் அவர்கள் மேலும் எச்.ஆர் ஸ்கொயர் தனியார் நிறுவனம் மூலம் வீடு தோரும் எடுக்கப்பட்டு வரும் குப்பைகளை பிரித்து எடுக்கும் இயந்திரத்தை நிறுவுவதற்கான பணிகளையும் பார்வையிட்டார். மேலும் இப்பணிகளை விரைந்து முடிக்கும்படி ஆட்சியர் சம்பந்தப்பட்ட புதிதாக பொறுப்பேற்ற நகராட்சி ஆணையர் சத்யா கேட்டுக் கொண்டார். உடன் செயற்பொறியாளர் லோகநாதன் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். மேலும் ஆட்சியர் கூறுகையில் இங்கு பணி செய்யும் மகளிர் மற்றும் பிறருக்கு கை உறை உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்களுடன் பணி புரியுமாறு ஊழியர்களை கேட்டுக்கொண்டார்.



▶ காரைக்கால் ஒ.என்.ஜி.சி காவேரி அசெட் மேனேஜராக ஆகஸ்டு 1 தேதி தேதியன்று உதய்பஸ்வான் (செயல் இயக்குனர்) பதவி ஏற்றுக கொண்டார்.அவர் மரியாதை நிமித்தமாக காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# காஞ்சி சங்கர மடத்தில் ஸ்ரீஜெயேந்திரர் ஜெயந்தி உற்சவம்



காஞ்சிபுரம்,ஆக,4

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் பீடாதிபதியாக இருந்துவந்த ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி 89வது ஜெயந்தி உற்சவம் நேற்று ஸ்ரீமடத்தில் விமரிசையாக நடைபெற்றது.

காஞ்சிபுரம் சங்கர மடத்தின் 69-வது பீடாதிபதியாக இருந்து வந்தவர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி . இவரது 89-வது ஜெயந்தி உற்சவத்தையொட்டி காலையில் 37 வேத விற்பன்னர்கள் அடங்கிய குழுவினரால் வேதபாராயணம் நடைபெற்றது. இதனையடுத்து ஏகாதச ருத்ர ஜெப ஹோமமம் நடைபெற்று மடத்தில் உள்ள மகா பெரியவர் மற்றும் ஜெயேந்திரர் அதிஷ்டானங்களுக்கு கலசாபிஷேகம் நடைபெற்றது.

மடத்தில் உள்ள ஜெயந்திரர் அதிஷ்டானம் தங்கக்கவசத்தாலும், வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு தீபாராதனைகளும் நடைபெற்றன. இதனையடுத்து மாதாந்திர அவிட்ட நட்சத்திர பூஜையும் நடைபெற்றன.

# சென்னை பழவந்தாங்கல் காவல் நிலையத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் திடீர் ஆய்வு



சென்னை, ஆக. 4-

சென்னை கிண்டியில் உள்ள தீரன் சின்னமலை சிலைக்கு நேற்று காலை மரியாதை செலுத்திய முதல்வர் ஸ்டாலின், நங்கநல்லூர் பகுதிகளில் நடைபெற்றுவரும்மழைநீர் வடிகால்பணிகளைநேரில் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, பழவந்தாங்கல் காவல் நிலையத்துக்கு சென்ற முதல்வர், கோப்புகளை ஆய்வு செய்த பின்னர், புகார் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து காவலர்களிடம் கேட்டறிந்தார்.

இதையடுத்து, காவல் நிலையத்தில் உள்ள காவலர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

# மணிப்பூர் மக்களுக்கு நியாயம் கேட்டு புதுக்கோட்டையில் போராட்டம்

## மாவட்ட ஆட்சியர் அலுவலகம் நுழைவாயில் இழுத்து மூடல்







புதுக்கோட்டை, ஆக. 4-

மணிப்பூர் ஒருமைப்பாடு மக்கள் கூட்டமைப்பு சார்பில் திமுக காங்கிரஸ் உள்ளிட்ட அதன் கூட்டணி கட்சி மற்றும் பல்வேறு அமைப்புகள் சார்பில் மணிப்பூரில் நடைபெற்று வரும் கொடுமைகளை கண்டித்தும் அந்த மாநில அரசு மற்றும் மத்திய அரசு தங்களது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணியில் ஈடுபட்ட போது தள்ளுமுள்ளு ஏற்பட்டதால் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கேட்டு மூடப்பட்டது.

புதுக்கோட்டையில் மணிப்பூர் ஒருமைப்பாடு மக்கள் கூட்டமைப்பு சார்பில் மணிப்பூர் கலவரத்தை கண்டித்தும் மத்திய அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலியுறுத்தியும் திமுக கூட்டணி கட்சிகளான திமுக, காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட் கட்சிகள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் கிருத்துவ மற்றும் முஸ்லிம் அமைப்புகள் சார்பில் சின்னப்பா பூங்காவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் திருச்சி வேலுச்சாமி தலைமை வைத்து சிறப்புரை ஆற்றினார். இதன் பின்னர் நடைபெற்ற பேரணியில் திமுக காங்கிரஸ் விடுதலை சிறுத்தைகள் உள்ளிட்ட பல்வேறு கட்சிகள் மற்றும் அமைப்புகளின் சேர்ந்த 1500 க்கும் மேற்பட்டோர் சின்னப்பா பூங்காவில் இருந்து பேரணியாக மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிப்பதற்காக புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வந்து அடைந்தது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளே நுழைவதற்கு முற்பட்டபோது போலீசார் அவர்களை தடுத்து நிறுத்தினார். இதனால் தள்ளுமுள்ளு ஏற்பட்டது .

பலர் கீழே விழுந்த சம்பவமும் நடைபெற்றன. இதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக கேட்டு மூடப்பட்டது. இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது தொடர்ந்து காவல்துறையினர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி அவர்களை கலைந்து போக செய்தனர். இதனைத் தொடர்ந்து நிர்வாகிகள் ஐந்து பேர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மணிப்பூர் கலவரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க கோரி மனு அளித்து சென்றனர். வெயிலின் தாக்கம் அதிகரித்து இருந்ததால் பேரணியில் நடந்து வருபவர்கள் கால்கள் சுடாமல் இருப்பதற்காக தண்ணீர் லாரிகள் மூலமாக சாலையில் தண்ணீர் ஊற்றப்பட்டது.



காரைக்காலில் சங்கரா ஹார்ட் பவுண்டேஷன் மற்றும் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ கல்லூரியும் இணைந்து சுமார் பத்துக்கும் மேற்பட்ட சிறப்பு இருதய அறுவை சிகிச்சை நிபுணர்கள் டாக்டர் மூர்த்தி தலைமையில் காரைக்கால் வருகை புரிந்து கடந்த ஜூலை மாதம் 15 , 16ஆகிய இரு தினங்கள் காரைக்காலில் அமைந்துள்ள அரசு பொது மருத்துவமனையில் இந்த சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை பெற்று பயனடைந்தார்கள். காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் சிறப்பான முயற்சியால் இந்த இரண்டு நாள் இலவச மருத்துவ முகாம் சிறப்பாக நடைபெற்றது, இதன் தொடர்ச்சியாக இதன் மூலம் இருதய நோய் உள்ளவர்கள் முதற்கட்டமாக கண்டறியப்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆலோசனையின் பேரில் அவர்கள் சென்னைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ க...

# கோயம்பேடு சந்தையில் ரூ.160-ல் நீடிக்கும் தக்காளி விலை



சென்னை , ஆக. 4-

கோயம்பேடு சந்தையில் தக்காளி விலை கிலோ ரூ.160 என்ற அளவில் நீடித்து வருகிறது. கோயம்பேடு சந்தையில் வரத்து குறைந்ததால் தக்காளி விலை தொடர்ந்து உச்சத்தில் இருந்து வருகிறது. நேற்றைய நிலவரப்படி கோயம்பேடு சந்தையில் மொத்த விலையில் கிலோ ரூ.160-க்கும், சில்லறை விலையில் கிலோ ரூ.180-க்கும் விற்கப்பட்டு வருகிறது.

தக்காளி விலை உயர்ந்ததில் இருந்து தக்காளி வாங்க வரும் மக்களின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துவிட்டது. அப்படியே தக்காளி வாங்க வந்தாலும் குறைந்த அளவில் வாங்கிச் செல்கின்றனர். 2 பேர், 3 பேர் சேர்ந்து ஒரு கிலோ வாங்கிச் செல்லும் நிலை இருந்து வருகிறது என்று இச்சந்தை சில்லறை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

சில இடங்களில் சில்லறை விற்பனையில் கிலோ 200 ரூபாய் வரை விற்கப்படுகிறது.பண்ணை பசுமை கடைகள் மற்றும் நியாயவிலைக்கடைகளில் வழக்கம்போல கிலோ 60 ரூபாய்க்கு விற்கப்பட்டு வருகிறது.

ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களின் எல்லைப் பகுதிகளில் இருந்து இன்னும் தக்காளி வரத்து அதிகரிக்கவில்லை. இருப்பினும் தமிழகத்தில் பிற பகுதிகளில் இருந்து தக்காளி ஓரளவு கொண்டுவரப்பட்டு, சென்னை மாநகரத் தக்காளி தேவை சமாளிக்கப்படுகிறது. தக்காளி விலை குறைய இன்னும் ஒரு மாதமாவது ஆகும் என்று மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.



நாமக்கல் கலெக்டர் உமா சேந்தமங்கலம் வட்டம் காரவள்ளியில், கொல்லிமலை வல்வில் ஓரி விழா நடைபெறுவதை முன்னிட்டு பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கு மஞ்சள் பைகளை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் பொன்னுசாமி உட்பட பலர் உள்ளனர்.

சீர்காழி அருகே அரசு பேருந்துகள் மாற்று பாதையில் இயக்கப்படுவதாகவும்,

# பேருந்து இயக்கம் குறைக்கப்படுவதாகவும், கிராம மக்கள் சாலை மறியலில் ஈடுபட முயற்சி





சீர்காழி, ஆக. 4-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி அருகே திருக்கருகாவூர், கீராநல்லூர், வெள்ள பள்ளம், வடகால், கடவாசல் ஆகிய கிராமங்களில் உள்ள பொதுமக்கள், மாணவ - மாணவிகள் சீர்காழிக்கு வந்து செல்ல திருக்கருக்காவூர் வழியாக சென்று வந்த பேருந்துகள் தற்போது மாற்று வழி தடத்தில் செல்வதாகவும்,

தங்கள் கிராம பகுதி வழியாக இயக்கப் படவில்லை எனவும், சீர்காழியிலிருந்து திருமுல்லைவாசலுக்கு முன்பு 8 பேருந்துகள் சென்று வந்த நிலையில் தற்போது 4 பேருந்துகள் மட்டும் வந்து செல்வதாகவும் குற்றம் சாட்டி கிராம மக்கள் சுமார் 70க்கும் மேற்பட்டவர்கள் சீர்காழி திருமலைவாசல் செல்லும் பிரதான சாலையில் வடகாலில் சாலை மறியல் செய்வதற்காக குவிந்தனர்.

தகவல் அறிந்து அங்கு சென்ற சீர்காழி போலீசார் கிராம மக்களை தடுத்து நிறுத்தி இதுகுறித்து வட்டாட்சியரிடம் புகார் தெரிவித்து பேச்சுவார்த்தை நடத்தலாம் என கூறினர்.

அதனை தொடர்ந்து அங்கிருந்து கிராம மக்கள் சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு வருகை புரிந்தனர். கிராம மக்கள் ஒன்றிணைந்து வட்டாட்சியர் செந்தில்குமாரிடம் மனு அளித்தனர்.

தொடர்ந்து வட்டாட்சியர் மற்றும் போக்குவரத்து துறை அதிகாரிகள், காவல்துறையினர் ஒன்றிணைந்து கிராம மக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி சீர்காழி திருமுலைவாசல் செல்லும் பேருந்துகளில் கீராநல்லூர் வழியாக முன்பு இயக்கப்பட்ட பேருந்துகள் தொடர்ந்து இயக்கிடவும், முன்பு 8 பேருந்துகள் இயக்கப்பட்டு தற்போது நிறுத்தப்பட்டிருந்தால் அவை ஆய்வு செய்து மீண்டும் இயக்கிடவும் பள்ளி நேரங்களில் மாணவர்களுக்கு சிரமம் இல்லாமல் பேருந்துகளை இயக்கமும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினர்.

இதனை அடுத்து மறியல் போராட்டத்தை வாபஸ் பெறுவதாக மக்கள் தெரிவித்து கலைந்து சென்றனர் .



காரைக்காலில் அமைந்துள்ள அவ்வையார் அரசு மகளிர் கல்லூரியில் அறிவியல் துறை சார்பில் உலக தாய்ப்பால் வாரத்தை (ஆகஸ்ட் 1 முதல் 7 வரை) முன்னிட்டு "தாய்ப்பால் ஊட்டுதல் மற்றும் பணிபுரியும் பெற்றோருக்கு மாற்றத்தை ஏற்படுத்துதல்" என்ற தலைப்பில்தாய்ப்பாலின் அவசியம் குறித்து மாணவிகளுக்கு சுவரொட்டி வழங்கல் மற்றும் செய்முறைப் போட்டி நடத்தப்பட்டது. முதன்மை விருந்தினராக முதல்வர் டாக்டர் டபிள்யூ. வி. பாலாஜியும், கௌரவ விருந்தினராக டாக்டர் கல்யாணசுந்தரம் (எச்.ஓ.டி., இயற்பியல்). ஹோம் சயின்ஸ் எச்.ஓ.டி. டாக்டர் நிதி கட்டியார் வரவேற்புரையாற்றினார்கள், உதவிப் பேராசிரியை டாக்டர் வி.எஸ்.ரேகா நன்றியுரை வழங்கினார், உதவிப் பேராசிரியை டாக்டர் பி.வண்டார்குழலி நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த எச்.ஒ.டி க்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்துகொண்டனர்.

# தூத்துக்குடி - மதுரை இடையே பராமரிப்பு இல்லாத நான்குவழிச் சாலை: விபத்தில் சிக்கும் வாகனங்கள்



கோவில்பட்டி, ஆக. 4-

தூத்துக்குடி முதல் மதுரை இடையேயான தேசிய நான்குவழிச்சாலை பராமரிப்பு இல்லாததால் மிக மோசமாக காணப்படுகிறது. வாகன ஓட்டிகள் பாதிப்படைந்து வருகின்றனர்.

தூத்துக்குடி - மதுரை இடையிலான மாநில நெடுஞ்சாலை தேசிய நெடுஞ்சாலையாக கடந்த 2007-ம் ஆண்டு தரம் உயர்த்தப்பட்டது. இவ்வழியே தினமும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் சென்று வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளாக சாலை பராமரிப்பு பணி என்ற பெயரில் சாலையின் மேலடுக்கு தார் கலவையை பல இடங்களில் பெயர்த்து எடுத்துவிட்டனர்.

அந்த இடத்தில் புதிதாக தார்ச்சாலை அமைப்பதில் மிகவும் தாமதப்படுத்துகின்றனர். 10 நாட்கள் வேலை நடந்தால் அதன்பின் பல மாதங்களுக்கு பணியே நடப்பதில்லை. இதனால் சாலையின் தரம் நாளுக்கு நாள் குறைந்து, வாகனங்களின் டயர் தேய்மானம் அதிகமாகி வருகிறது. எட்டயபுரம் அருகே சோழபுரம், சிந்தலக்கரை, தாப்பாத்தி செல்லும் வழி ஆகிய இடங்களில் மேலடுக்கு தார் பெயர்த்து எடுக்கப்பட்டுள்ளதால், வாகனங்கள் 80 கி.மீ. வேகத்தில் வரும் போது, மிகவும் சிரமத்துடன் செல்கின்றன.

சில நேரங்களில் கார், வேன்களில் அலசல் ஏற்பட்டு, சாலையோரப் பள்ளத்துக்கு தள்ளப்படுகின்றன. மேலும், தாப்பாத்தி, சிந்தலக் கரை பகுதியில் தேசிய நெடுஞ்சாலையில் ஆங்காங்கே பள்ளங்கள் உள்ளதால்,கனரகலாரிகள், கார்களின் டயர்கள் வெடித்து விபத்துகளில் சிக்குகின்றன. எளிதான போக்குவரத்துக்கு என அமைக்கப்பட்ட தேசிய நான்குவழிச் சாலையில் பயணிப்பது ஆபத்தை விளைவிப்பதாக வாகன ஓட்டிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.

எனவே, தூத்துக்குடி - மதுரை தேசிய நான்குவழிச் சாலையில் பராமரிப்பு பணிகளை முறையாக மேற்கொண்டு விபத்துகளை தவிர்க்க வழிவகைசெய்யவேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

எரியாத விளக்குகள்: தேசிய நான்குவழிச்சாலையில் உள்ள ஒவ்வொரு கிராம விலக்குகளிலும் எச்சரிக்கை விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த விளக்குகள் பல இடங்களில் எரியவில்லை. இதனால் இரவு நேரங்களில் வரக்கூடிய வாகனங்கள் 'யு' வளைவு தெரியாமல் விபத்துகளில் சிக்குகின்றன. விளக்குகளையும் பராமரிக்காமல் அப்படியே கைவிட்டுள்ளனர்.

**சுங்கக் கட்டணத்தில் கவனம்:** தூத்துக்குடி அருகே புதூர் பாண்டியாபுரம், மதுரை அருகே எலியார்பட்டி ஆகிய இடங்களில் சுங்கச் சாவடிகள் அமைக்கப்பட்டு, சுங்கக்கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. திருச்செந்தூர், குலசேகரன்பட்டினம், தூத்துக்குடி துறைமுகம் உள்ளிட்ட பகுதிகளுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் சென்று வருவதால், தினமும் லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் கிடைக்கிறது. ஆனால், சாலையை சீரமைப்பதில் மெத்தனம் காட்டப்படுகிறது.

# புதுச்சேரி அரசு நலவழித்துறை சார்பில் தேசிய உடல் உறுப்புக்கள் தானம் பற்றிய விழிப்புணர்வு பேரணி"



காரைக்கால் , ஆக. 4-

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் வழிகாட்டல்படி நலவழித்துறை சார்பில் நேற்று தேசிய உடல் உறுப்புக்கள் தான தினத்தை முன்னிட்டு உடல் உறுப்புக்கள் மற்றும் திசுக்கள் தானம் பற்றிய அவசியத்தை வலியுறுத்தி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்து இமாகுலேட் செவிலிய பயிற்சி மாணவிகள் பங்கு கொண்ட விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இப்பேரணியை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் மாவட்ட ஆட்சியர் கூறியதாவது இருக்கும் போது இரத்த தானம் இறந்த பின் கண் தானம் என்று விழிப்புணர்வை ஏற்படுத்தி கொண்டிருந்தோம் ஆனால் இன்றைய காலகட்டத்தில் உறுப்புகள் பாதிக்கப்பட்டு பல மனித உயிர்கள் சாவின் விளிம்பில் நிற்கின்றனர் .

ஆகையால் ஒரு மனிதன் இறந்தபின் உறுப்புகளை மனமுவந்து தானம் செய்வது இந்த உலகில் அவசியமாகிறது என்றும் மூளை சாவுகள் அடைந்த பலரின் உடல்கள் எரிக்கப்படுகிறது அல்லது புதைக்கப்படுகிறது. ஆகையால் அவர்களின் உடல் உறுப்புகளை தானம் செய்து பல உயிர்களை வாழவைக்க முடியும் என்றும் ஆகையால் உடல் உறுப்புக்கள் தானத்தை பற்றி பொதுமக்களுக்கு விழிபுணர்வை பெருமளவில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். நாம் உயிருடன் இருக்கும் போதே உடல் உறுப்புக்கள் தானம் செய்ய விரும்புபவர்கள் தங்களின் குடும்பத்துனருடன் ஆலோசித்துவிட்டு மருத்துவத்துறைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டர்.

இந்நிகழ்ச்சியில் நலவழித்துறை துணை இயக்குனர் டாகடர். சிவராஜ்குமார் நோய்தடுப்பு திட்ட ஒருங்கிணைப்பாளர் டாக்டர். தேனாம்பிகை மாவட்ட நோய்தடுப்பு தொழில் நுட்ப உதவியாளர் சீ.சேகர், செவிலியர் கல்லூரி விரிவுரையாளர் கீதா சுகாதார ஆய்வாளர்கள் ஆண்ரூஸ்,சிவவடிவேல் ஆகியோர கலந்துக் கொண்டனர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் முன்னிலையில் சுகாதார உதவியாளர்கள் ரங்கநாதன், பூமிநாதன், பூவனா, ராஜவேலு ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர் இப்பேரணி முக்கிய வீதிகளின் வழியாக விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திக்கொண்டு பொதுமக்களுக்கு உடல் உறுப்புக்கள் தானத்தை பற்றிய அவசியத்தை வலியுறுத்தியப்படி மீண்டும் காரைக்கால் ஆட்சியர் வலாகத்திற்கு வந்தடைந்தார்கள்.

புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில்

# சிறைக் கைதிகளுக்கு புத்தகங்களைப் பரிசளித்த மாற்றுத்திறனாளி மாணவர்கள்



புதுக்கோட்டை, ஆக.4-

புதுக்கோட்டை புத்தகத் திருவிழாவில் சிறைக் கைதிகளுக்கு புத்தகங்களைப் பரிசளித்த பார்வையை இழந்த மாற்றுத்திறனாளி மாணவர்களின் செயல் அனைவரையும் நெகிழ வைத்தது.

புதுக்கோட்டை பேருந்து நிலையம் அருகில் பார்வைத்திறன் குறையுடையோருக்கான அரசு நடுநிலைப்பள்ளி உள்ளது. இப்பள்ளியில் படிக்கும் மாணவர்கள் புதுக்கோட்டையில் நடைபெறும் புத்தகத் திருவிழாவிற்கு செல்ல வேண்டும் என்று ஆசிரியர்களிடம் தங்கள் ஆசையை வெளிப்படுத்தினர். இதனையடுத்து பார்வைத்திறன் குறையுடைய 20 மாணவர்களை விழாக்குழுவினர் புத்தகத் திருவிழாவிற்கு அழைத்து வந்தனர். அவர்களுடன் தலைமை ஆசிரியர் வடிவேலன் மற்றும் பணியாளர்கள் வந்திருந்தனர்.

புத்தகத் திருவிழாவிற்கு வந்த அவர்களை இதரப் பள்ளிகளில் இருந்து வருகை தந்த மாணவ, மாணவிகள் இருபுறங்களிலும் நின்று கைதட்டி உற்சாக வரவேற்பு அளித்தனர். ஒருங்கிணைப்பாளர்கள் தங்கம்மூர்த்தி, அ.மணவாளன், ஜீவி, எம். வீரமுத்து, மு.முத்துக்குமார், ஸ்டாலின் சரவணன், பவுனம்பால், கீதா உள்ளிட்டோரும் அவர்களை வரவேற்று அழைத்து வந்தனர்.

புத்தக அரங்கத்திற்குள் சென்ற மாற்றுத்திறனாளி மாணவர்கள் புத்தகங்களைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து மகிழ்ந்தனர். மேலும், சிறைக் கைதிகளுக்கு புத்தகங்கள் அனுப்பும் அரங்கிற்கு வந்த அவர்கள் பல்வேறு தலைப்பிலான புத்தகங்களை வாங்கி பரிசளித்தனர்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், நாங்கள் வரும்போது எங்களை சக மாணவர்கள் கைதட்டி வரவேற்றது மிகுந்த உற்சாகமாக இருந்தது. இங்குள்ள புத்தகங்களை எங்களால் வாசிக்க முடியாது. எங்களால் பிரைலி வடிவிலான எழுத்துக்களை மட்டுமே வாசிக்க முடியும். ஆகவே, நாங்கள் சிறைக் கைதிகளுக்கு புத்தகங்களை வாங்கி அனுப்பி உள்ளோம். இந்தப் புத்தகங்களை படித்து அவர்கள் வாழ்க்கையை நல்வழிப் படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காக இதைச் செய்கிறோம் என்றனர்.

# ஆலங்குடியில் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை யாத்திரை பயணம்



ஆலங்குடி, ஆக.04-

ஆலங்குடியில் பா.ஜ.க மாநிலத்தலைவர் அண்ணாமலையாத்திரை பயணம்மேற்கொண்டார். புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் பா.ஜ.க மாநிலத்தலைவர் அண்ணாமலையின் என் மண் என் மக்கள் யாத்திரை நடைபெற்றது.

ஆலங்குடி அருகே அரிமளம் விளக்குப்பகுதியில் நடைப்பயணத்தைத் தொடங்கி சந்தைப்பேட்டை, வடகாடு முக்கம், அரசமரம், மருத்துவமனை சாலைஉள்ளிட்டபகுதிகள் வழியாக நடந்து சென்று காமராஜர் சிலை அருகே பிரச்சார வாகனத்தில் ஏறி சிறப்புறையாற்றினார்.

பின்னர், பிரச்சார வாகனத்தில் ஏறி அண்ணாமலை பேசியதாவது, தி.மு.க., ஆட்சியில் கட்டப்பஞ்சாயத்து, உடந்தையாக, தவறு செய்தவர்களே ஆட்சிக்கட்டிலில்இருப்பது தான் திராவிட மாடல் ஆட்சி. இந்த ஆட்சியில் கமிஷன், கரெப்ஷன், கலெக்சன் மூன்று சி-தான். இந்த ஆட்சியின் முகவரி அடையாளம். 27 மாதங்களில் இந்த ஆட்சியின் அவலநிலையை பார்த்துவிட்டோம்.

தொடர்ந்து, மாநில தலைவர் என்ற முறையில் தேர்தல் ஆணையத்திற்கு ஒரு கடிதம் எழுதினேன். அதில், இதற்கு முன் புதுக்கோட்டைக்குஎம்.பி., தொகுதி இருந்தது. அதன் பிறகு மறுசீரமைப்பில் அதை உடைத்து, பிரித்து விட்டார்கள். புதுக்கோட்டை மிகவும் பழமையான, முதன்மையான மாவட்டம். அந்த மாவட்டத்திற்குஒருஎம்.பி., தொகுதி இல்லையென்று எழுதினேன். அதற்கு பதில் கடிதம் வந்தது இதனை பரிசிலனை செய்வதாகதெரிவித்தனர். புதுக்கோட்டை ஒரு எம்பி., தொகுதியின் கீழ் வந்ததால் தான் மக்களுக்கு நல்லது நடக்கும். தற்போது, புதுக்கோட்டை மாவட்டம் நான்கு எம்.பி., தொகுதியின் கீழ் உள்ளது, என்மண் என்மக்கள் பயணத்தில் புதுக்கோட்டை முக்கிய அங்கமாக உள்ளது என இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில் பாஜக மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனா்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் மழையூர் அகத்தீஸ்வரர் ஆலய திருகுளத்தில் ஆடி பெருக்கு திருநாளை முன்னிட்டு பெண்கள் சிறப்பு பூஜைகள் நடத்தி படையல் இட்டு மஞ்சள் கயிறு அணிந்து ஆடிபெருக்குதிருநாளை கொண்டாடினர்.இதில் திரளான பெண்கள் கலந்து கொண்டு வழிப்பட்டனர்.



▶ தென்காசி மாவட்டம் கடையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சி திட்ட பணிகளை நேற்று மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



▶ அரியலூர் மாவட்டம், திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக(கிஊ) பணியாற்றிய, எஸ் ஜாகிர் உசேன் இடமாற்றம் செய்யப்பட்டு, செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலராக (வஊ) பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு, செந்துறை ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்தனர்.



▶ கிருஷ்ணகிரி தமிழ்நாடு ஓட்டல் மற்றும் ஒசூர் தமிழ்நாடு ஓட்டல் ஆகிய ஓட்டல் விடுதிகள் மற்றும் உணவகங்களின் செயல்பாடுகள் மற்றும் அவதானப்பட்டி சிறுவர் பூங்காவை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக நிர்வாக இயக்குநர் சந்தீப் நந்தூரி, கலெக்டர் கே.எம்.சரயு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஒய். பிரகாஷ், தே.மதியழகன், மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

# கந்தர்வகோட்டை அருகே ஸ்ரீ ஆபத் சகாய ஈஸ்வரர் கோவில் சங்கு ஊரணி படித்துறையில் ஆடிப் பெருக்கு விழா



கந்தர்வகோட்டை, ஆக.4-

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகே ஸ்ரீ ஆபத் சகாய ஈஸ்வரர் கோவில் சங்கு ஊரணி படித்துறையில் ஆடிப் பெருக்கு விழாவை முன்னிட்டு ஏராளமான புதுமண தம்பதிகள் மஞ்சள் கயிறு அணிந்து, தேங்காய் பழம் கருகமணி வைத்து மஞ்சளில் பிள்ளையார் பிடித்துதீபம் ஏற்றி வழிபட்டனர்.

ஆடி பட்டம் தேடி விதை என்பது பழமொழி ஆடி மாதம் 18 ஆம் நாள் ஆடிப்பெருக்கு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது இதனை அடுத்து தமிழகத்தில் உள்ள ஆற்றங்கரை குளங்கள் ஆடிப் பெருக்குவிழாவிமரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது

அதன் ஒரு பகுதியாக புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருள்மிகு ஸ்ரீ ஆபத் சகாய ஈஸ்வரர் திருக்கோவில் குளக்கரையில் ஏராளமான பொதுமக்கள் தலைவாழை இலையில் மஞ்சளில் பிள்ளையார் பிடித்து தேங்காய், பழங்கள், காதோலை கருகமணி வைத்து தீபம் ஏற்றி ஆண்டு தோறும் விவசாயத்திற்கு பயன்படும் காவிரியை வழிபட்டனர். இதே போல் நவதானியங்களால் முளைப்பாரி வைத்து அதனை ஆற்றில் விட்டும் நதிக்கரையை பொதுமக்கள், விவசாயிகள் வழிபட்டனர். புதுமண தம்பதிகள் ஆடிப்பெருக்கு அன்று மஞ்சள் கயிறு மாற்றிக் கொண்டால் சகல ஐஸ்வர்யங்களும் கிடைக்கும் என்பது ஐதீகம் இதன் காரணமாக புதுமண தம்பதிகள் மஞ்சள் கயிறு கட்டி வழிபட்டனர். முன்னதாக கொள்ளிடம் ஆற்றங்கரையில் நீராடி பொதுமக்களும் பொதுமண தம்பதிகளும் ஆடிப்பெருக்கு விழாவை சிறப்பாககொண்டாடினர்.

# தென்காசி குருக்கள்பட்டியில் பிஎல்ஏ 2 பூத் முகவர்கள் கூட்டம்

## வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ பங்கேற்பு



சங்கரன்கோவில். ஆக.4-

தென்காசி வடக்கு மாவட்டம் மேலநீலிதநல்லூர் தெற்கு ,கிழக்கு, மேற்கு, ஒன்றிய திமுக சார்பில் குருக்கள்பட்டியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் வைத்து பிஎல் ஏ 2 பூத் முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தலைமை வகித்தார்.

மேலநீலிதநல்லூர் தெற்கு கிழக்கு மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர்கள், வெற்றி விஜயன் ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து பேசிய வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ பூத் முகவர்கள் சிறப்பாக செயல்பட வேண்டும் என பேசினர்.

நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு ,மாவட்ட துணைச் செயலாளர்கள் மனோகரன், புனிதா, ராஜதுரை, பொதுக்குழு உறுப்பினர்கள் தேவா என்ற தேவதாஸ், சங்கரன்கோவில் வடக்கு ஒன்றியச் செயலாளர் மதி மாரிமுத்து ,சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ் மற்றும் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மேலநீலிதநல்லூர் ஒருங்கிணைந்த ஒன்றிய கழகத்தின் பூத் கமிட்டி உறுப்பினர்கள், அவைத் தலைவர்கள் ,ஒன்றிய துணைச் செயலாளர்கள் , மாவட்ட பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் ஒன்றிய பிரதிநிதிகள், கழக மூத்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா மெட்ரிக் பள்ளியில் சர்வதேச தர்பூசணி தினம்





புதுக்கோட்டை, ஆக.4-

புதுக்கோட்டை ஸ்ரீ வெங்கடேஸ் வராமெட்ரிக். மேல்நிலைப்பள்ளியில் தண்ணீர் தாகத்தைதீர்க்கும் தர்பூசணிப் பழ தினம் கொண்டாடப்பட்டது. சர்வதேச தர்பூசரணிதினமாக உலகெங்கும் கொண்டாடப்படும் நாளில் பள்ளியில் எல்.கே.ஜி முதல் இரண்டாம் வகுப்புமாணவர்கள் வீட்டிலிருந்துதர்பூசணி ஜூஸ் மற்றும் தர்பூசணிபழக்கீற்றுகளையும் கொண்டுவந்தனர். மழலைக் குழந்தைகள் பச்சைசிவப்புவண்ணங்களில் தர்பூசணி வேடமணிந்தும் கழுத்துகாதுகளில் தர்பூசணிவடிவத் தோடுகள் சங்கிலிகள் அணிந்தும் வந்தனர். வகுப்பறைகளில் தர்பூசணிக் கீற்றுகளால் ஆனதோரணங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

தர்பூசணிக் பழக் கீற்றுகளால் உருவாக்கப்பட்ட ஐஸ்கிரீம், லாலிபாப்,கேக்குகள், கூடைநிறையகீற்றுகள் எனகுழந்தைகள் ஆசை ஆசையாய் வியந்துபார்க்கும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மழலைக் குழந்தைகள் தாங்கள் கொண்டு வந்ததர்ப் பூசணிக் கீற்றுகளை பக்கத்து வகுப்பறைகளுக்குச் சென்றுகுழந்தைகளுக்கு கொடுத்துமகிழ்ந்தனர்.

தர்பூசணிதினத்தை கொண்டாடும் விதமாக பள்ளியின் மழலை மாணவர்கள் தர்பூசணிபழம் தொடர்பான பாடல்கள், செய்திகளைக் கூறும் நிகழ்வு நடைபெற்றது. பள்ளிமுதல்வர் கவிஞர் தங்கம் மூர்த்தி கூறும்போது பொதுவாகதர்ப்பூசணிபழம் வெயில் கொடுமையிலிருந்து நம்மைக் காக்கும் இயற்கை குளுக்கோஸ் ஆகும். இது உடல் சூட்டைத் தணிப்பதோடு இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைக்கிறது. சிறுநீரகக் கற்கள் உருவாவதைத் தடுக்கிறஆற்றல் தர்பூசணிக்கு உண்டு, வேறெங்கும் இல்லாதவகையில் எங்கள் பள்ளியில் மழலை மாணவர்களைமகிழ்விக்கும் விதமாகவும், குழந்தைகளுக்கு தேவையான ஆரோக்கிய உணவுப் பொருட்களை அறிமுகப்படுத்தும் விதமாகவும் இதுபோல பயனுள்ளதினங்களைக் கொண்டாடுகின்றோம். பெற்றோர்களும் மிகுந்த ஆர்வத்தோடு குழந்தைகளைக் கொண்டாடும் நிகழ்வுகளில் பங்கெடுக்கின்றனர். என்று கூறினார். நிகழ்வில் பள்ளியின் துணைமுதல்வர் குமாரவேல், ஒருங்கிணைப்பாளர்கள் கௌரி, கோமதிமற்றும் மழலையர் வகுப்பு ஆசிரியர்கள் கலந்துகொண்டர்.

# அரியலூர் மாவட்டம் திருமழபாடி பகுதியில் ரூ.6.91 கோடி மதிப்பீட்டில் 25 புதிய திட்டப் பணிகள்

## அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் துவக்கி வைத்தார்





அரியலூர் ஆக.4-

அரியலூர் மாவட்டம், திருமழபாடி பகுதியில் ரூ.6.91 கோடி மதிப்பீட்டில் 25 புதிய திட்டப் பணிகளை, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியத்தில், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில், பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் துவக்க விழாவுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனி மேரிஸ்வர்ணா தலைமை வகித்தார். அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் கு.சின்னப்பா முன்னிலை வகித்தார்.

திருமானூர் ஊராட்சி ஒன்றியம், வாரணவாசி, பார்ப்பனச்சேரி, கீழப்பழுவூர், கீழையூர், கீழக் காவட்டாங்குறிச்சி, அயன் சுத்தமல்லி, சன்னாவூர், பழங்காநத்தம், கண்டிராதீர்த்தம், மற்றும் புதுக்கோட்டை கிராம ஊராட்சிகளில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்ட பணிகள், சில கிராம ஊராட்சிகளில் சாலை அமைக்கும் பணி உள்ளிட்டவற்றை தொடங்கி வைத்தும், வாரணவாசி ஊராட்சியில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை திறந்து வைத்தும், இரண்டு பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள அரங்க மேடைகளை திறந்து வைத்தும், கல்லகம்-திருமழபாடி சாலையில் மீண்டும் பாலம் கட்டும் பணியை தொடங்கி வைப்பது உள்பட, 6.91 கோடிரூபாய்மதிப்பிலான வளர்ச்சி பணிகளை, போக்குவரத்து துறை அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் தொடங்கி வைத்து பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் இலக்குவன், ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் பிரபாகர், திருமானூர் ஒன்றியக் குழுத்தலைவர் சுமதி அசோக சக்கரவர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயக்குமாரி, பொய்யாமொழி, ஊராட்சிமன்றத் தலைவர்கள் வாரணவாசி ராஜேந்திரன், பார்ப்பனச்சேரி பெரியசாமி, அயன் சுத்தமல்லி உலகநாதன், புதுக்கோட்டை ஆரோக்கியம், கண்டிராதித்தம் சந்திரா ராமமூர்த்தி, காண்ட்ராக்டர் விளாகம் பன்னீர்செல்வம், திமுக மாவட்ட இலக்கிய அமைப்பாளர் கருப்புசாமி, திமுக பிரமுகர்கள் பார்ப்பனச்சேரி விஜயகுமார், காந்திநகர் தனவேல், சிவலிங்கம் புதுக்கோட்டை கிளை செயலாளர் வில்லியம் பீட்டர், கேஎம்செல்வம், கண்டிராதித்தம்செல்வம், மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# டெல்லி அரசு அதிகாரிகள் நியமன மசோதா மக்களவையில் நிறைவேற்றம்

# விராலிமலை மருத்துவமனை குடிநீர் தொட்டியில் குரங்குகள் சடலம் மீட்பு





# மணிப்பூர் மக்களுக்கு நீதி புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகம் முடல்


| சென்னை / புதுக்கோட்டை | 04.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

**வேலூர் ஜி. ராமபத்ரன்** , தமிழக மிருதங்கக் கலைஞர் (பி.1929) (இ.2012)



**நா. தர்மராஜன்** , தமிழக எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் (பி.1935)



**ந. ரங்கசாமி** , புதுச்சேரியின் 9வது முதலமைச்சர் (பி.1950)



**பராக் ஒபாமா** , அமெரிக்காவின் 44வது அரசுத்தலைவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1961)



## இன்றைய நினைவு நாள்

**பொன். கணேசமூர்த்தி** , ஈழத்துக் கலைஞர் (இ.2006)



**நந்தினி சத்பதி** , இந்திய அரசியல்வாதி, எழுத்தாளர் (பி.1931) (இ.2006)



**ச. அகத்தியலிங்கம்** , தமிழக மொழியியல் அறிஞர் (பி.1929) (இ.2008)

